பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 139 நாள்: 12.09.2018

**பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறையின் சார்பாக நடைபெற்ற பிளாஸ்டிக் தடுப்பு விழிப்புணர்வு முகாமில் பள்ளி மாணவியர்களுக்கு துணிப்பைகள் வழங்கப்பட்டன.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை சார்பாக நோய்த்தடுப்பு மற்றும் பிளாஸ்டிக் உபயோகிப்பதினால் ஏற்படும் தீங்குகள் குறித்து பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி, சென்னை மாநகர் முழுவதும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, இன்று (12.09.2018) தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட திருவல்லிக்கேணி, லேடி வெல்லிங்டன் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற பிளாஸ்டிக் தடுப்பு விழிப்புணர்வு முகாமில் எக்ஸ்நோரா மற்றும் லயன்ஸ் கிளப் ஒத்துழைப்புடன் பள்ளி மாணவியர்களுக்கு துணிப்பைகள் வழங்கப்பட்டன.

பிளாஸ்டிக் உபயோகிப்பதினால் ஏற்படும் சுகாதார கேடுகள், ஒருமுறை பயன்படுத்தக் கூடிய மக்காத பிளாஸ்டிக் பொருட்களை தவிர்த்து பாரம்பரியமாக பயன்படுத்தக் கூடிய வாழை இலைகள், பாக்கு மர தட்டுகள், துணிப்பைகள், சணல் பைகள் போன்றவற்றை பயன்படுத்துவதன் அவசியம் குறித்து இந்த விழிப்புணர்வு முகாமில் விளக்கப்பட்டது.

இம்முகாமில், டெங்கு காய்ச்சலை பரப்பும் ஏடிஸ் கொசுக்கள் உருவாகும் விதம், அதன் வாழ்க்கை சுழற்சி, உருவாகாமல் தடுக்கும் முறைகள் முதலியன குறித்தும் விழிப்புணர்வு வழங்கப்பட்டது. இதில் சுமார் 200 மாணவியர்கள் பங்கேற்றனர்.

பின்னர், மாணவியர்கள் கலந்து கொண்ட விழிப்புணர்வு பேரணி டாக்டர் பெசன்ட் சாலை, அயோத்தி நகர் குடிசைமாற்று வாரிய குடியிருப்புகள் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் நடைபெற்றது. பேரணியில் மாணவியர்கள் டெங்கு மற்றும் பிளாஸ்டிக் விழிப்புணர்வு பதாகைகள், துணிப்பைகள் மற்றும் பேனர்களுடன் ஊர்வலமாக சென்று பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, துண்டுப் பிரசுரங்களை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி சுகாதார கல்வி அலுவலர் முனைவர் டி.ஜி.சீனிவாசன், எக்ஸ்நோரா தலைவர் கோவிந்தராஜ், லயன்ஸ் கிளப் நிர்வாகிகள் மற்றும் ஆசிரிய பெருமக்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி**